DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 21/2024** |
| Deposition of Witness for | : PW 5 |
| Name | : டாக்டர்.மாரிராஜ் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 22.01.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 22nd January 2026.

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசுதரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. நீதிமன்றம் தானாக சாட்சி அளிக்கும் சாட்சியத்தை பதிவு செய்கிறது.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் அரசு மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.10.2015 அன்று இரவு 8.30 மணியளவில் நான் முழு நேர பணியில் இருந்தபோது 40 வயதுடைய தேவேந்திரன் என்பவர் அவராகவே சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு வந்து தன்னை அடையாளம் தெரிந்த ஒரு ஆண் நபர் மகேந்திரவாடி சர்ச்க்கு அருகில் 23.10.2015 அன்று சுமார் மாலை 6.00 மணிக்கு தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதனை செய்ததில் அவருக்கு பின்வரும் காயங்கள் காணப்பட்டது.

1. இடது உள்ளங்கையில் ஆள்காட்டி விரலுக்கு கீழ் 3x0.5 செமீ அளவில் தோல் ஆழத்திற்கு வெட்டுக்காயம் காணப்பட்டது.

2. இடது முன்னங்கையில் 10x4 செமீ முட்டைவடிவ வீக்கம் காணப்பட்டது. அந்த வீக்கத்தில் பற்காயங்கள் எதுவும் காணப்படவில்லை.

அவருக்கு முதலுதவி செய்து அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் என சான்று அளித்தேன். **அவரது காயச்சான்று அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

ஒரு நபர் இருசக்கரவாகனத்தில் கரடுமுரடான பாதையில் செல்லும்போது கீழேவிழுவதால் நான் முதல்விசாரணையில் கூறிய காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் இல்லை. மேற்கூறிய நபர் இருசக்கரவாகனத்தில் சென்றுகொண்டிருக்கும்போது கூர்மையான பொருள்களின் மேல் கீழே விழுந்தால் நான் முதல்விசாரணையில் கூறிய காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் வாய்ப்புள்ளது. போலீசார் ஆயுதங்கள் எதையும் என்னிடம் காண்பித்து கருத்து பெற்றார்களா என்றால் இல்லை.

**மறுவிசாரணை இல்லை.**